ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருப்பாற்கடல்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருப்பாற்கடல்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
 வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு’ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
 ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
 ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
 ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
 ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
 ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரியாழ்வார் திருமொழி – சீலைக்குதம்பை

பன்றியும் ஆமையும் மீனமும் ஆகிய ⋆
பாற்கடல் வண்ணா ! உன்மேல் ⋆
கன்றின் உருவாகி மேய் புலத்தே வந்த ⋆
கள்ள அசுரர் தம்மை ⋆
சென்று பிடித்துச் சிறுக் கைகளாலே ⋆
விளங்காய் எறிந்தாய் போலும் ⋆
என்றும் என் பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்கள் ⋆
அங்ஙனம் ஆவர்களே ‖ **3.3.7** ‖

## பெரியாழ்வார் திருமொழி – துப்புடையாரை

பை அரவின் அணைப் பாற்கடலுள் ⋆
பள்ளி கொள்கின்ற பரம மூர்த்தி ! ⋆
உய்ய உலகு படைக்க வேண்டி ⋆
உந்தியில் தோற்றினாய் நான்முகனை ⋆
வைய மனிசரைப் பொய் என்றெண்ணிக் ⋆
காலனையும் உடனே படைத்தாய் ⋆

ஐய ! இனி என்னைக் காக்க வேண்டும் ⋆
அரங்கத்தரவணைப் பள்ளியானே ! ‖ **4.10.5** ‖

## பெரியாழ்வார் திருமொழி – வாக்குத்தூய்மை

வெள்ளை வெள்ளத்தின் மேல் ஒரு பாம்பை ⋆
மெத்தையாக விரித்து ⋆
அதன் மேலே கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம் ⋆
காணலாங்கொல் என்றாசையினாலே ⋆
உள்ளம் சோர உகந்தெதிர் விம்மி ⋆
உரோம கூபங்களாய் ⋆
கண்ண நீர்கள் துள்ளம் சோரத் துயில் அணை கொள்ளேன் ⋆
சொல்லாய் யான் உன்னைத் தத்துறுமாறே ‖ **5.1.7** ‖

## பெரியாழ்வார் திருமொழி – நெய்க்குடத்தை

‡ அரவத்தமளியினோடும் ⋆
அழகிய பாற்கடலோடும் ⋆
அரவிந்தப் பாவையும் தானும் ⋆
அகம் படி வந்து புகுந்து ⋆
பரவைத் திரை பல மோதப் ⋆
பள்ளி கொள்கின்ற பிரானை ⋆
பரவுகின்றான் விட்டுசித்தன் ⋆
பட்டினம் காவற் பொருட்டே ‖ **5.2.10** ‖

## பெரியாழ்வார் திருமொழி – சென்னியோங்கு

பனிக் கடலில் பள்ளி கோளைப் ⋆
பழகவிட்டு ⋆
ஓடி வந்தென் மனக் கடலில் வாழ வல்ல ⋆

மாய மணாளா நம்பீ ! ⋆
தனிக் கடலே ! தனிச் சுடரே ! ⋆
தனி உலகே என்றென்று ⋆
உனக் கிடமாய் இருக்க ⋆
என்னை உனக்குரித்தாக்கினையே ‖ **5.4.9** ‖

## ஆண்டாள் அருளிச்செய்த – திருப்பாவை

வையத்து வாழ்வீர்காள் ! நாமும் நம் பாவைக்குச் ⋆
செய்யும் கிரிசைகள் கேளீரோ ⋆
பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் அடி பாடி ⋆
நெய் உண்ணோம் பால் உண்ணோம் நாட்காலே நீர் ஆடி ⋆
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம் ⋆
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம் ⋆
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி ⋆
உய்யுமாறெண்ணி உகந்தேலோர் எம் பாவாய் ‖ **2** ‖

## நாச்சியார் திருமொழி – நாமமாயிரம்

குண்டு நீர் உறை கோளரீ ! ⋆
மத யானை கோள் விடுத்தாய் ! ⋆
உன்னைக் கண்டு மால் உறுவோங்களைக் ⋆
கடைக் கண்களால் இட்டு வாதியேல் ⋆
வண்டல் நுண் மணல் தெள்ளி ⋆
யாம் வளைக் கைகளால் சிரமப் பட்டோம் ⋆
தெண் திரைக் கடற் பள்ளியாய் ! ⋆
எங்கள் சிற்றில் வந்து சிதையேலே ‖ **2.3** ‖

## நாச்சியார் திருமொழி – மன்னு பெரும்புகழ்

பொங்கிய பாற் கடல் பள்ளி கொள்வானைப் ⋆
புணர்வதோர் ஆசையினால் ⋆
என் கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து ⋆
ஆவியை ஆகுலம் செய்யும் அங்குயிலே ! ⋆
உனக்கென்ன மறைந்துறைவு ⋆
ஆழியும் சங்கும் ஒண் தண்டும் ⋆
தங்கிய கையவனை வரக் கூவில் ⋆
நீ சாலத் தருமம் பெறுதி ‖ **5.7** ‖

## பெருமாள் திருமொழி – தேட்டருந்திறல்

மாலை உற்ற கடல் கிடந்தவன் ⋆
வண்டு கிண்டு நறுந் துழாய் ⋆
மாலை உற்ற வரைப் பெருந் திருமார்வனை ⋆
மலர்க் கண்ணனை ⋆
மாலை உற்றெழுந்தாடிப் பாடித் ⋆
திரிந்தரங்கன் எம்மானுக்கே ⋆
மாலை உற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு ⋆
மாலை உற்றதென் நெஞ்சமே ‖ **2.8** ‖

## பெருமாள் திருமொழி – ஊனேறு

ஒண் பவள வேலை ⋆
உலவு தண் பாற்கடலுள் ⋆
கண் துயிலும் மாயோன் ⋆
கழல் இணைகள் காண்பதற்கு ⋆
பண் பகரும் வண்டினங்கள் ⋆
பண் பாடும் வேங்கடத்துச் ⋆

செண்பகமாய் நிற்கும் ⋆
திருவுடையேன் ஆவேனே ‖ **4.4** ‖

### திருமழிசைப்பிரான் அருளிச்செய்த – திருச்சந்தவிருத்தம்

ஏக மூர்த்தி மூன்று மூர்த்தி ⋆
நாலு மூர்த்தி நன்மை சேர் ⋆
போக மூர்த்தி புண்ணியத்தின் மூர்த்தி ⋆
எண்ணில் மூர்த்தியாய் ⋆
நாக மூர்த்தி சயனமாய் ⋆
நலங்கடல் கிடந்து ⋆
மேல் ஆக மூர்த்தி ஆயவண்ணம் ⋆
எங்கொல் ஆதி தேவனே ! ‖ **17** ‖

விடத்த வாய் ஓர் ஆயிரம் ⋆
இராயிரம் கண் வெந்தழல் ⋆
விடத்து வீழ்விலாத போகம் ⋆
மிக்க சோதி தொக்க சீர் ⋆
தொடுத்து மேல் விதானமாய ⋆
பௌவநீர் அராவணை ⋆
படுத்த பாயல் பள்ளி கொள்வது ⋆
எங்கொல் வேலை வண்ணணே ! ‖ **18** ‖

வால் நிறத்தொர் சீயமாய் ⋆
வளைந்த வாள் எயிற்றவன் ⋆
ஊன் நிறத்துகிர்த்தலம் ⋆
அழுத்தினாய் ! உலாய சீர் ⋆
நால் நிறத்த வேதநாவர் ⋆
நல்ல யோகினால் வணங்கு ⋆

பால் நிறக் கடல் கிடந்த ⋆
பற்பநாபன் அல்லையே ॥ **23** ॥

படைத்த பார் இடந்தளந்து ⋆
அதுண்டுமிழ்ந்து பௌவநீர் ⋆
படைத்தடைத்ததிற் கிடந்து ⋆
முன் கடைந்த பெற்றியோய் ⋆
மிடைத்த மாலி மாலிமான் ⋆
விலங்கு காலன் ஊர் புகப் ⋆
படைக்கலம் விடுத்த ⋆
பல் படைத் தடக்கை மாயனே ! ॥ **28** ॥

பரத்திலும் பரத்தை ஆதி ⋆
பௌவநீர் அணைக் கிடந்து ⋆
உரத்திலும் ஒருத்தி தன்னை ⋆
வைத்துகந்ததன்றியும் ⋆
நரத்திலும் பிறத்தி ⋆
நாத ஞான மூர்த்தி ஆயினாய் ⋆
ஒருத்தரும் நினாது தன்மை ⋆
இன்னதென்ன வல்லரே ॥ **29** ॥

கடைந்து பாற்கடல் கிடந்து ⋆
காலநேமியைக் கடிந்து ⋆
உடைந்த வாலி தன் தனக்கு ⋆
உதவ வந்திராமனாய் ⋆
மிடைந்த ஏழ் மரங்களும் ⋆
அடங்க எய்து ⋆

வேங்கடம் அடைந்த மால பாதமே ⋆
அடைந்து நாளும் உய்ம்மினோ ॥ **81** ॥

விடைக் குலங்கள் ஏழ் அடர்த்து ⋆
வென்றி வேற்கண் மாதரார் ⋆
கடிக் கலந்த தோள் புணர்ந்த ⋆
காலி ஆய ! வேலை நீர் ⋆
படைத்தடைத்ததில் கிடந்து ⋆
முன் கடைந்து நின் தனக்கு ⋆
அடைக்கலம் புகுந்த என்னை ⋆
அஞ்சல் என்ன வேண்டுமே ॥ **92** ॥

அடக்கரும் புலன்கள் ஐந்தடக்கி ⋆
ஆசையாம் அவை ⋆
தொடக்கறுத்து வந்து ⋆
நின் தொழிற்கண் நின்ற என்னை நீ ⋆
விடக் கருதி மெய் செயாது ⋆
மிக்கோர் ஆசை ஆக்கிலும் ⋆
கடற் கிடந்த நின் அலால் ⋆
ஓர் கண்ணிலேன் எம் அண்ணலே ! ॥ **95** ॥

தூயனாயும் அன்றியும் ⋆
சுரும்புலாவு தண் துழாய் ⋆
மாய ! நின்னை நாயினேன் ⋆
வணங்கி வாழ்த்தும் ஈதெலாம் ⋆
நீயும் நின் குறிப்பினில் ⋆
பொறுத்து நல்கு வேலை நீர் ⋆

பாயலோடு பத்தர் சித்தம் ⋆
மேய வேலை வண்ணனே ! ‖ **110** ‖

### தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த – திருமாலை

இனி திரைத் திவலை மோத ⋆
எறியும் தண் பரவை மீதே ⋆
தனி கிடந்தரசு செய்யும் ⋆
தாமரைக் கண்ணன் எம்மான் ⋆
கனி இருந்தனைய செவ்வாய்க் ⋆
கண்ணனைக் கண்ட கண்கள் ⋆
பனி அரும்பு திருமாலோ ⋆
என் செய்கேன் பாவி யேனே ! ‖ **18** ‖

### பெரிய திருமொழி – வாணிலா முறுவல்

கோடிய மனத்தால் சினத் தொழில் புரிந்து ⋆
திரிந்து நாய் இனத்தொடும் திளைத்திட்டு ⋆
ஓடியும் உழன்றும் உயிர்களே கொன்றேன் ⋆
உணர்விலேன் ஆதலால் ⋆
நமனார் பாடியைப் பெரிதும் பரிசழித்திட்டேன் ⋆
பரமனே ! பாற்கடல் கிடந்தாய் ! ⋆
நாடி நான் வந்துன் திருவடி அடைந்தேன் ⋆
நைமிசாரணியத்துள் எந்தாய் ‖ **1.6.6** ‖

ஊன் இடைச் சுவர் வைத்தென்பு தூண் நாட்டி ⋆
உரோமம் வேய்ந்தொன்பது வாசல் ⋆
தான் உடைக் குரம்பை பிரியும் போது ⋆
உன் தன் சரணமே சரணம் என்றிருந்தேன் ⋆

தேன் உடைக் கமலத் திருவினுக்கரசே ! ⋆
திரை கொள் மா நெடும் கடல் கிடந்தாய் ! ⋆
நான் உடைத் தவத்தால் திருவடி அடைந்தேன் ⋆
நைமிசாரணியத்துள் எந்தாய் ॥ **1.6.9** ॥

## பெரிய திருமொழி – கொங்கலர்ந்த

‡ பள்ளி ஆவது பாற்கடல் அரங்கம் ⋆
இரங்க வன் பேய் முலை ⋆
பிள்ளையாய் உயிர் உண்ட எந்தை ⋆
பிரான் அவன் பெருகும் இடம் ⋆
வெள்ளியான் கரியான் ⋆
மணி நிற வண்ணன் என்றெண்ணி ⋆
நாள் தொறும் தெள்ளியார் வணங்கும் மலை ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ॥ **1.8.2** ॥

## பெரிய திருமொழி – ஆய்ச்சியர்

கறவை முன் காத்துக் கஞ்சனைக் காய்ந்த ⋆
காளமேகத் திரு உருவன் ⋆
பறவை முன் உயர்த்து பாற்கடல் துயின்ற ⋆
பரமனார் பள்ளி கொள் கோயில் ⋆
துறை துறை தோறும் பொன் மணி சிதறும் ⋆
தொகு திரை மண்ணியின் தென்பால் ⋆
செறி மணி மாடக் கொடி கதிர் அணவும் ⋆
திருவெள்ளியங்குடி அதுவே ॥ **4.10.4** ॥

‡ பண்டு முன் ஏனம் ஆகி அன்றொரு கால் ⋆
பார் இடந்தெயிற்றினில் கொண்டு ⋆

தெண் திரை வருடப் பாற்கடல் துயின்ற ⋆
திருவெள்ளியங்குடியானை ⋆
வண்டறை சோலை மங்கையர் தலைவன் ⋆
மான வேல் கலியன் வாய் ஒலிகள் ⋆
கொண்டிவை பாடும் தவம் உடையார்கள் ⋆
ஆள்வர் இக்குரை கடல் உலகே ‖ **4.10.10** ‖

## பெரிய திருமொழி – கைம்மானம்

‡ கைம் மான மழ களிற்றைக் ⋆
கடல் கிடந்த கரு மணியை ⋆
மைம் மான மரதகத்தை ⋆
மறை உரைத்த திருமாலை ⋆
எம்மானை எனக்கென்றும் இனியானைப் ⋆
பனி காத்த அம்மானை ⋆
யான் கண்டது ⋆
அணி நீர்த் தென் அரங்கத்தே ‖ **5.6.1** ‖

## பெரிய திருமொழி – செங்கமலம்

‡ செங்கமலத் திருமகளும் புவியும் ⋆
செம் பொன் திருவடியின் இணை வருட முனிவர் ஏத்த ⋆
வங்க மலி தடங்கடலுள் அனந்தன் என்னும் ⋆
வரி அரவின் அணைத் துயின்ற மாயோன் காண்மின் ⋆
எங்கு மலி நிறை புகழ் நால் வேதம் ⋆
ஐந்து வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை ⋆
அங்கமலத்தயன் அனையார் பயிலும் செல்வத்து ⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ‖ **7.8.1** ‖

## பெரிய திருமொழி – வண்டார்

வெள்ளை நீர் வெள்ளத்து ⋆
அணைந்த அரவணை மேல் ⋆
துள்ளு நீர் மெள்ளத் ⋆
துயின்ற பெருமானே ⋆
வள்ளலே ! உன் தமர்க்கென்றும் ⋆
நமன் தமர் கள்ளர் போல் ⋆
கண்ணபுரத்துறை அம்மானே ! ‖ **8.10.7** ‖

## பெரிய திருமொழி – மூவரில்

‡ மூவரில் முன் முதல்வன் ⋆
முழங்கார் கடலுள் கிடந்து ⋆
பூவலர் உந்தி தன்னுள் ⋆
புவனம் படைத்துண்டுமிழ்ந்த ⋆
தேவர்கள் நாயகனை ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
கோவலர் கோவிந்தனைக் ⋆
கொடியேர் இடை கூடுங்கொலோ ‖ **9.9.1** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

வங்கத்தால் மா மணி வந்துந்து முந்நீர் மல்லையாய் ! ⋆
மதிள் கச்சி ஊராய் ! பேராய் ⋆
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன் ⋆
குலவரையன் மடப் பாவை இடப்பால் கொண்டான் ⋆
பங்கத்தாய் ! பாற்கடலாய் ! பாரின் மேலாய் ! ⋆
பனி வரையின் உச்சியாய் ! பவள வண்ணா ⋆

எங்குற்றாய் எம் பெருமான் ! உன்னை நாடி ⋆
ஏழையேன் இங்ஙனமே உழிதருகேனே ! ‖ **9** ‖

கல் உயர்ந்த நெடு மதிள் சூழ் கச்சி மேய களிறென்றும் ⋆
கடல் கிடந்த கனியே ! என்றும் ⋆
அல்லியம் பூ மலர்ப் பொய்கைப் பழன வேலி ⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அம்மான் என்றும் ⋆
சொல் உயர்ந்த நெடு வீணை முலை மேல் தாங்கித் ⋆
தூ முறுவல் நகை இறையே தோன்றநக்கு ⋆
மெல் விரல்கள் சிவப்பெய்தத் தடவி ஆங்கே ⋆
மென் கிளி போல் மிக மிழற்றும் என் பேதையே ‖ **15** ‖

## திருவாய்மொழி – அந்தாமத்தன்பு

பாம்பணைமேல் பாற் கடலுள் ⋆
பள்ளி அமர்ந்ததுவும் ⋆
காம்பணை தோள் பின்னைக்கா ⋆
ஏறுடன் ஏழ் செற்றதுவும் ⋆
தேம் பணைய சோலை ⋆
மராமரம் ஏழ் எய்ததுவும் ⋆
பூம் பிணைய தண் துழாய்ப் ⋆
பொன் முடியும் போர் ஏறே ‖ **2.5.7** ‖

## திருவாய்மொழி – வைகுந்தா

உய்ந்து போந்தென் உலப்பிலாத ⋆
வெந் தீ வினைகளை நாசம் செய்து ⋆
உனதந்தம் இல் அடிமை அடைந்தேன் ⋆
விடுவேனோ ⋆

ஐந்து பைந்தலை ஆட அரவணை மேவிப் ⋆
பாற்கடல் யோக நித்திரை ⋆
சிந்தை செய்த எந்தாய் ⋆
உன்னைச் சிந்தை செய்து செய்தே ॥ **2.6.5** ॥

## திருவாய்மொழி – பயிலும் சுடரொளி

‡ பயிலும் சுடர் ஒளி மூர்த்தியைப் ⋆
பங்கயக் கண்ணனை ⋆
பயில இனிய ⋆
நம் பாற்கடல் சேர்ந்த பரமனை ⋆
பயிலும் திரு உடையார் ⋆
யவரேலும் அவர் கண்டீர் ⋆
பயிலும் பிறப்பிடை தோறு ⋆
எம்மை ஆளும் பரமரே ॥ **3.7.1** ॥

## திருவாய்மொழி – தேவிமாராவார்

மணந்த பேராயா ! மாயத்தால் முழுதும் ⋆
வல் வினையேனை ஈர்கின்ற ⋆
குணங்களை உடையாய் ! அசுரர் வன்கையர் கூற்றமே ! ⋆
கொடிய புள் உயர்த்தாய் ⋆
பணங்கள் ஆயிரமும் உடைய பைந்நாகப் பள்ளியாய் ! ⋆
பாற்கடல் சேர்ப்பா ⋆
வணங்குமாறறியேன் ⋆
மனமும் வாசகமும் செய்கையும் யானும் நீ தானே ॥ **8.1.8** ॥

## திருவாய்மொழி – நங்கள் வரிவளை

இடை இல்லை யான் வளர்த்த கிளிகாள் ⋆
பூவைகாள் ! குயில்காள் ! மயில்காள் ⋆
உடைய நம் மாமையும் சங்கும் நெஞ்சும் ⋆
ஒன்றும் ஒழிய ஒட்டாது கொண்டான் ⋆
அடையும் வைகுந்தமும் பாற்கடலும் ⋆
அஞ்சன வெற்பும் அவை நணிய ⋆
கடையறப் பாசங்கள் விட்ட பின்னை அன்றி ⋆
அவன் அவை காண் கொடானே ॥ **8.2.8** ॥

## திருவாய்மொழி – செஞ்சொற்கவிகாள்

‡ திருமாலிருஞ்சோலை மலையே ⋆
திருப்பாற்கடலே என் தலையே ⋆
திருமால் வைகுந்தமே ⋆
தண் திருவேங்கடமே எனதுடலே ⋆
அரு மா மாயத்தெனதுயிரே ⋆
மனமே வாக்கே கருமமே ⋆
ஒரு மா நொடியும் பிரியான் ⋆
என் ஊழி முதல்வன் ஒருவனே ॥ **10.7.8** ॥

## பொய்கையாழ்வார் அருளிச்செய்த – முதல் திருவந்தாதி

உரை மேல் கொண்டு ⋆
என் உள்ளம் ஓவாது ⋆
எப்போதும் வரை மேல் ⋆
மரகதமே போல ⋆
திரை மேல் கிடந்தானைக் ⋆

கீண்டானை ⋆
கேழலாய்ப் பூமி இடந்தானை ஏத்தி எழும் ॥ **25** ॥

## பூதத்தாழ்வார் அருளிச்செய்த – இரண்டாம் திருவந்தாதி

பரிசு நறு மலரால் ⋆
பாற்கடலான் பாதம் ⋆
புரிவார் புகப்பெறுவர் போலாம் ⋆
புரிவார்கள் தொல் அமரர் கேள்வித் ⋆
துலங்கொளி சேர் தோற்றத்து ⋆
நல் அமரர் கோமான் நகர் ॥ **3** ॥

மனத்துள்ளான் வேங்கடத்தான் ⋆
மா கடலான் ⋆
மற்றும் நினைப்பரிய ⋆
நீள் அரங்கத்துள்ளான் ⋆
எனைப் பலரும் தேவாதி தேவன் ⋆
எனப்படுவான் ⋆
முன் ஒரு நாள் மா வாய் பிளந்த மகன் ॥ **28** ॥

## பேயாழ்வார் அருளிச்செய்த – மூன்றாம் திருவந்தாதி

நன்கோதும் ⋆
நால் வேதத்துள்ளான் ⋆
நறவிரியும் பொங்கோதருவிப் புனல் வண்ணன் ⋆
சங்கோதப் பாற்கடலான் ⋆
பாம்பணையின் மேலான் ⋆
பயின்றுரைப்பார் நூற் கடலான் நுண் அறிவினான் ॥ **11** ॥

இவை அவன் கோயில் ⋆
இரணியனதாகம் ⋆
அவை செய்தரி உருவம் ஆனான் ⋆
செவி தெரியா நாகத்தான் ⋆
நால் வேதத்துள்ளான் ⋆
நறவேற்றான் பாகத்தான் பாற்கடல் உளான் ‖ **31** ‖

பாற்கடலும் வேங்கடமும் ⋆
பாம்பும் பனி விசும்பும் ⋆
நூற் கடலும் நுண் நூல தாமரை மேல் ⋆
பாற்பட்டிருந்தார் மனமும் ⋆
இடமாகக் கொண்டான் ⋆
குருந்தொசித்த கோபாலகன் ‖ **32** ‖

‡ பண்டெல்லாம் வேங்கடம் ⋆
பாற்கடல் வைகுந்தம் ⋆
கொண்டங்குறைவார்க்குக் கோயில் போல் ⋆
வண்டு வளம் கிளரும் நீள் சோலை ⋆
வண் பூங்கடிகை ⋆
இளங்குமரன் தன் விண்ணகர் ‖ **61** ‖

## திருமழிசைப்பிரான் அருளிச்செய்த – நான்முகன் திருவந்தாதி

பாலில் கிடந்ததுவும் ⋆
பண்டரங்கம் மேயதுவும் ⋆
ஆலில் துயின்றதுவும் ஆர் அறிவார் ⋆
ஞாலத்தொரு பொருளை ⋆
வானவர் தம் மெய்ப் பொருளை ⋆
அப்பில் அரு பொருளை யான் அறிந்த வாறு ‖ **3** ‖

‡ நாகத்தணைக் குடந்தை ⋆
வெஃகா திருவெவ்வுள் ⋆
நாகத்தணை அரங்கம் பேர் அன்பில் ⋆
நாகத்தணைப் பாற்கடல் கிடக்கும் ⋆
ஆதி நெடுமால் ⋆
அணைப்பார் கருத்தன் ஆவான் ‖ **36** ‖

நாக் கொண்டு ⋆
மானிடம் பாடேன் ⋆
நலம் ஆகத் தீக் கொண்ட ⋆
செஞ்சடையான் சென்று ⋆
என்றும் பூக் கொண்டு வல்லவாறு ⋆
ஏத்த மகிழாத ⋆
வைகுந்தச் செல்வனார் சேவடிமேல் பாட்டு ‖ **75** ‖

ஆய்ந்து கொண்டு ⋆
ஆதிப் பெருமானை ⋆
அன்பினால் வாய்ந்த மனத்திருத்த வல்லார்கள் ⋆
ஏய்ந்த தம் மெய் குந்தம் ஆக ⋆
விரும்புவரே ⋆
தாமும் தம் வைகுந்தம் காண்பார் விரைந்து ‖ **79** ‖

## நம்மாழ்வார் அருளிச்செய்த – திருவிருத்தம்

வேதனை வெண் புரி நூலனை ⋆
விண்ணோர் பரவ நின்ற நாதனை ⋆
ஞாலம் விழுங்கும் அநாதனை ⋆
ஞாலம் தத்தும் பாதனைப் பாற் கடல் பாம்பணை மேல் பள்ளி

கொண்டருளும் ⋆ சீதனையே தொழுவார் ⋆
விண் உளாரிலும் சீரியரே ॥ **79** ॥

### நம்மாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருவந்தாதி

பால் ஆழி நீ கிடக்கும் பண்பை ⋆
யாம் கேட்டேயும் கால் ஆழும் ⋆
நெஞ்சழியும் கண் சுழலும் ⋆
நீல் ஆழிச் சோதியாய் ! ஆதியாய் ! ⋆
தொல்வினை எம்பால் கடியும் ⋆
நீதியாய் ! நிற் சார்ந்து நின்று ॥ **34** ॥

உரைக்கில் ஓர் சுற்றத்தார் ⋆
உற்றார் என்றாரே ⋆
இரைக்கும் கடல் கிடந்த எந்தாய் ⋆
உரைப்பெல்லாம் நின் அன்றி ⋆
மற்றிலேன் கண்டாய் ⋆
எனதுயிர்க்கோர் சொல் நன்றி ஆகும் துணை ॥ **77** ॥

**திரு கடல்மகள் நாச்சியார் சமேத க்சீராப்திநாதன் திருவடிகளே சரணம்**